# உலகெங்குமுள்ள தமிழர்களுக்கு கலங்கரை விளக்கமாக கழக ஆட்சி இருக்கிறது!

**முதல் பக்கத் தொடர்ச்சி...**

சிங்கப்பூருக்கு வருகை தந்து தன்னுடைய சீர்திருத்தக் கருத்துகளை தமிழர்களிடையே விதைத்தார். பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் இங்கு வருகை தந்து அந்த உணர்வை வளர்த்தெடுத்தார்கள்.

**கீழடியில் அருங்காட்சியகம்!**

இப்படி திராவிட இயக்க உணர்வால் வளர்ந்த திராவிட விழுதுகளான உங்களைக் காண்பதற்காகத்தான் நானும் இங்கே வந்திருக்கிறேன். தமிழும் தமிழ்நாடும் திராவிட இயக்கக் கொள்கைகளும் இணைக்கும் நம்மை மதமோ, சாதியோ பிளவுபடுத்திவிட முடியாது. நம் தமிழின உணர்வுக்கு அடிப்படையான பெருமைகள் அனைத்துக்கும் இப்போது தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன.

கி.மு.ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில்,

வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததை,

தமிழர்கள் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை

அறிவியல் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை நிலைநிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள், பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு அதனை, சில மாதங்களுக்கு முன்பு நான் திறந்து வைத்தேன்.

**தமிழினத்தின் பெருமையை மீட்கும் கழக அரசு!**

இதே போல் திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இந்தியாவின் வரலாறு தமிழ்நாட்டில் இருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். தமிழினத்தின் பெருமையை மீட்கும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்துள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய "ஒரு பண்பாட்டின் பயணம்" என்ற நூலை அண்மையில் வெளியிட்டேன். தமிழன் என்று சொல்லிக் கொள்வதில் நாம் எத்தகைய பெருமையை அடைய வேண்டும் என்பதற்கு அடிப்படையான நூல் அது.

சிந்துவெளி பண்பாடு என்பது 5000 ஆண்டுகள் பழமையானது. அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மொழி தமிழ் மொழி. வாழ்ந்த மக்கள் சங்ககாலத் தமிழரின் மூதாதையர் என்பதை நிறுவி இருக்கிறார். தமிழினத்தின் வேர்கள் என்பவை தமிழ்நாட்டுடன் முடிகிறவை அல்ல. உலகின் பலநாடுகளுக்கும் பரவி இருந்தவை என்பதை அறிய முடிகிறது. அத்தகைய பாரம்பரியத்தின் சின்னமாக சிங்கப்பூர் தமிழர்களாகிய நீங்களும் இருக்கிறீர்கள்.

**சிங்கப்பூர் - தமிழ்நாடு தொடர்பு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டது!**

சிங்கப்பூருக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு என்பது, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டது. சிங்கப்பூரில் கண்டெடுக்கப்பட்ட பத்தாம் நூற்றாண்டு கல்வெட்டில் தமிழ்ப் பெயர் இருக்கிறது என்று சமீபத்தில் ஒரு ஆய்வு நூல் வெளியாகி உள்ளது. சர் ஸ்டாம்ஃபோர்டு இராபிள்ஸ்

(Sir Stamford Raffles) காலத்தில் சிங்கப்பூரின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள், சாலைகள், வழிபாட்டு இடங்கள் ஆகியவற்றின் உருவாக்கத்திலும் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் பங்கு இருந்திருக்கிறது.

இப்போதும் தங்கள் உழைப்பின் மூலமாக இந்த நாட்டை உயர்த்தி வருகிறீர்கள். அதன்மூலமாக நீங்களும் உயர்ந்து வருகிறீர்கள். கல்வியும் உழைப்பும்தான் தமிழர்களின் இந்த உயர்வுக்குக் காரணம். தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் பலர் சிங்கப்பூரில் பல்வகைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் நலன் காக்கும் பணியிலும் திராவிட மாடல் அரசு பெரும் பங்காற்றி வருகிறது.

சிங்கப்பூர்க் குடிமக்களாகிய தமிழ் மக்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் முதலிய பல்வேறு பொறுப்புகளில் இருந்து வருவதும் எனக்குப் பெரு மகிழ்ச்சி தருகிறது. இத்தகைய அமைதியான வாழ்க்கை உங்கள் அனைவர்க்கும் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சாதாரண நிலையில் இருந்த சிங்கப்பூரை உலகம் போற்றும் நாடாக மாற்றிக் காட்டியவர்கள் இந்த நாட்டின் பிரதமர்கள்.

**லீ குவான் யூ புகழ் இன்று வரை நீடித்துள்ளது!**

லீ குவான் யூ அவர்களின் புகழ் இன்று வரை நீடித்து நிலைத்து இருக்கிறது. இந்தியாவுடனான வணிகத் தொடர்பையும் அவர் வளர்த்தார். இந்திய வணிகத் தொடர்பை வளர்த்ததில் முந்தைய பிரதமர் கோ சோக் தோங் அவர்களுக்குப் (Goh Chok Tong) பெரும் பங்குண்டு. இன்றைய பிரதமர் லீயும் தொடர்ந்து அதனை நிலைக்கச் செய்கிறார். இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை நோக்கி சிங்கப்பூர் நிறுவனங்க ளை ஈர்ப்பதற்காக நான் வருகை தந்துள்ளேன்.

புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கின்றன. வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெற இருக்கிறது. அதில் பங்கெடுக்க சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் நான் இங்கே வருகை தந்திருக்கிறேன். தொழில் முனைவோராக இருக்கக் கூடிய தமிழர்கள் இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தது முதல் தமிழ்நாட்டு தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கும் கலங்கரை விளக்கமாக நாம் ஆட்சியை நடத்தி வருகிறோம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டது.

**வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியத்தை அமைத்துள்ளோம்!**

வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம் ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் அதனைப்பற்றி கவலைப்படவில்லை. இந்த நிலையில், 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' என்ற அமைப்பை மறக்காமல் நாங்கள் அமைத்துள்ளோம். அதுமட்டுமல்ல, அயலகத் தமிழர் நலத்துறை உருவாக்கப்பட்டதும் திமுக ஆட்சிக் காலத்தில் தான்.

வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிதி உதவிகள் வழங்கப்படுகிறது.

சட்ட உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுகிறது. புலம் பெயர்ந்தோர் பிள்ளைகள் தமிழ் கற்றுக் கொள்ள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது.

புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இன்னும் பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள். அதனை முறைப்படி தமிழ்நாட்டில்தான் அறிவிக்க முடியும்.

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளில் உள்ள எழுத்தாளர்கள் எழுதும் நூல்களை வாங்கித், தமிழ்நாட்டு நூல் நிலையங்களில் வைப்பது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள இளைஞர்களைத் தமிழ்நாட்டுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ச் சான்றோர்களை அறிஞர்களை பேராசிரியர்களை மதித்து விருது வழங்குதல்.

கலைகள், பண்பாட்டுப் பரிமாற்றம், நாட்டுப்புறக் கலைஞர்களை புலம்பெயர் நாடுகளுக்கு அனுப்பி ஊக்குவித்தல்.

பண்பாட்டுப் பரிமாற்றம் பெருக பல கண்காட்சிகளை நடத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள்.

இவை குறித்து தமிழ்நாடு சென்ற பின்பு ஆலோசித்து, முறையான அறிவிப்பை வெளியிடுவேன் என்ற உறுதிமொழியை நான் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். எனது அன்பு வேண்டுகோள் என்பது, இங்குள்ள தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து அவர்களின் வணிக வளத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான வசதிகள், அனுமதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு செய்து கொடுக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

**சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் அதிகம் இடம் பெற வேண்டும்!**

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது. 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான திராவிடக் கோட்பாடு அடிப்படையிலான ஆட்சியை நடத்தி வருகிறோம். 2030 நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை அரசு நிர்ணயித்துள்ளது. எனவேதான் பல்வேறு தொழில்துறை முதலீட்டு மாநாடுகளை நடத்தியுள்ளோம். அடுத்த ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு வரும் போது அதில் சிங்கப்பூர் முதலீட்டாளர்களும் அதிகமாக இடம் பெற வேண்டும் என்று விரும்பு கிறேன்.

**அண்ணாவின் உரையைக் கேட்ட லீ குவான் யூ!**

அடுத்து, சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் லீ குவான் யூ அவர்களால் தான் தமிழர்களும் தமிழும் இங்கு உயர்வை அடைந்தது. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சால் ஈர்க்கப்பட்டவர் லீ குவான் யூ அவர்கள். சிங்கப்பூரில் அண்ணாவின் உரையைக் கேட்ட லீ குவான் யூ அவர்கள் தனது மூத்த சகோதரர் என்று பாசத்தோடு குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல, தனது அலுவலகத்துக்கு அண்ணா அவர்களை அழைத்து விருந்து கொடுத்தார். அதனால்தான் லீ குவான் யூ அவர்கள் இறந்தபோது சிங்கப்பூரின் நாயகன் என்று போற்றினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆகவே ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். லீ குவான் யூ அவர்களுக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்ப நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். இது தமிழ்நாட்டில் மன்னார்குடியில் அமைய இருக்கிறது. சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, திருமக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மேலத்திருப்பாலக்குடி, கீழத்திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை நெடுவாக்கோட்டை, மேலவாசல் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சிங்கப்பூருடன் தொடர்பு உண்டு என்பதை நான் நன்றாக அறிவேன். இந்தக் கிராமங்களில் இருந்து வந்தவர்கள் தான் அதிகம். எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களை உயர்த்தும் தமிழ்நாட்டை உயர்த்த நீங்கள் அனைவரும் கைக்கோக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இந்த அன்புமிகு வரவேற்பை நல்கிய உங்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வாழ்வில் அனைத்து நலமும் வளமும் கிடைக்க தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் மட்டுமல்ல, உங்களின் ஒருவனாக உங்கள் அன்பு உடன்பிறப்பாக எனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் "மொழி சார்ந்த முயற்சிகள்" என்ற தலைப்பில் சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்ட அமைச்சர் கா.சண்முகம் கருத்துரையாற்றினர், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு "சுற்றுலா மற்றும் பண்பாட்டு வாய்ப்புகள்" தொடர்பாக உரையாற்றினார். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ரவீந்திரன் வரவேற்புரை ஆற்றினார். முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாரம்பரிய நடனம் மற்றும் நாதஸ்வர இசையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன் இந்திய சிங்கப்பூர் கலைஞர்களின் ஆடல் பாடல் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# கோவை வேளாண் பல்கலையில் மெய்நிகர் உண்மை ஆய்வுக் கூடம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டார்!

*கோவை, மே 26-*

புதுடெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் செயல்பட்டு வரும் தேசிய வேளாண்மை உயர்கல்வி திட்டத்தின் கீழ் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிறுவன மேம்பாட்டு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி ரூபாய் 24.86 கோடி நிதி அளித்துள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ரூபாய் 5 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் கல்வி கற்றல் முறையை மேம்படுத்தி, வேளாண் வணிகத்தை நிர்வகிப்பதற்கு தலைவர்களை உருவாக்கவும் வேலை தேடும் மாணவர்கள் காட்டிலும் வேலை வழங்கும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதற்காக பல்கலைக்கழகத்தின் சேவைத் தரத்தையும், நிர்வாகத்தையும் மேம்படுத்த கல்வி மேலாண்மையில் சீர்திருத்தங்கள் செய்வதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

மொழி கற்றல் பயிற்சி கூடங்கள், பெரிய தரவு பகுப்பாய்வுக் கூடம், விரிவாக்கக் கூடம், கணினி அறிவு சார்ந்த துல்லிய வேளாண்மை பயிற்சி கூடங்களும் நிறுவப்பட்டுள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இயங்கி வரும் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செயல் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் தற்போது பயின்று வரும் மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இயங்க கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்வி வளாகம் பசுமைமயமாக்கல், சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல், சமுதாய கோட்பாடுகளை கடைப்பிடித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து செயலாக்கப்பட்டுள்ளது.

24.05.2023 அன்று வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மெய்நிகர் உண்மை (Virtual Reality) ஆய்வுக்கூடத்தை பார்வையிட்டு அங்கு தயாரிக்கப்பட்ட 15 வேளாண்சார்ந்த பாடத்தொகுதிகளை (Modules) பற்றி தெரிந்து கொண்டார். மாணவர்கள் யானைக்கு மயக்க ஊசி செலுத்தும் பாடத் தொகுதியை வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களுக்கு செயல்படுத்தி காட்டினார்.

பல்கலைக்கழகத்திலுள்ள மொழி கற்றல் பயிற்சி கூடத்தை பார்வையிட்டார். இங்கு மாணவர்கள் ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழியில் கலந்துரையாடினார். மேலும் தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள் ஆங்கிலத்தில் நன்றாக பேச பயிற்சி எடுத்துக் கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நவீன மின்னணு விரிவாக்க கூடத்தை பார்வையிட்டார். இங்கு மாணவர்கள் மின்னணு குறும்படங்கள் விளம்பர பலகைகள் உருவாக்குவதை பற்றி விளக்கினார்கள்.

தற்போது வெளிநாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறும் 37 மாணவர்கள் நிகழ்நிலை (Online) கூட்டத்தின முலம் அமைச்சர் அவர்களுக்கு தாங்கள் மேற்கொள்ளும் பயிற்சிகளையும் அதனால் அடையக்கூடிய பலன்களையும் தெரிவித்தனர். துபாய் ஆஸ்திரேலியா இங்கிலாந்து தென்கொரியா மலேசியா நாடுகளிலிருந்து மாணவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், 30.5.2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மாவட்டஇளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர்அணி, மீனவரணி, நெசவாளர்அணி, விவசாயஅணி, விவசாயத் தொழிலாளர் அணி, பொறியாளர்அணி, மருத்துவர்அணி, வர்த்தகர்அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, தகவல்தொழில்நுட்பபிரிவுஅணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவது சம்பந்தமாக.

ஜுன் 3 வடசென்னையில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வது சம்பந்தமாக.

ஜுன்20 ஆம்நாள் திருவாரூரில் "கலைஞர்கோட்டம்" திறப்புவிழா பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்க உள்ளார். இந்த விழா முழுநாள் நிகழ்வாகக் கவியரங்கம், பட்டிமன்றம் பொதுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் நடைபெற இருப்பதால் இதில் கலந்துகொள்வது சம்பந்தமாக.

ஜுன் 3 அன்று கிளைக் கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து கழகத் தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்திடுவது சம்பந்தமாக.

ஜுன் 3 பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிளைக் கழகங்கள் தோறும் கொடியேற்றி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்தியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடுவது சம்பந்தமாக.

உறுப்பினர் சேர்த்தல் முழுமைப்படுத்துதல் சம்பந்தமாக,

இளைஞரணி சார்பாக தெருமுனைப் பிரச்சாரக்கூட்டம் நடத்துவது.

கழக ஆக்கப்பணிகள்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தூத்துக்குடி என். பெரியசாமி

## மே 26 (2017)



ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனிலும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.

தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை "என்னுடைய முரட்டு பக்தன்" என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். "என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது." என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**